**Starting time 11.33 A.M.**

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

**O.S. No. 41/2014**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K.Janaki, Gr. III Bench Clerk of this court, on 19.10.2022 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : தங்கராஜ் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :** இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால், இல்லை. வாதிகள்தான் என்னை சாட்சியம் அழைத்தார்களா என்றால், ஆமாம். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை வாதிகள்தான் சொன்னார்களா என்றால், ஆமாம். இவ்வழக்கை யார், என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. தாவா சொத்தின் பட்டா எண், தெரியுமா என்றால், தெரியாது. நான் 1-ம் வாதியின் அன்புகரசியின் மைத்துனன் என்றால், சரிதான்.

2. முத்துசாமி என்பவர் 1-ம் பிரதிவாதி அழகம்மாளுக்கு என்ன உறவு என்றால், உடன்பிறந்த தம்பி ஆவார். அங்கமுத்து என்பவர் யார் என்றால், அழகம்மாளின் கணவரின் அண்ணன் ஆவார். பெரியாசாமி என்பவர் யார் என்றால், அழகம்மாளின் பங்காளி ஆவார். ஆவணத்தை யார் எழுதியது என்றால், பனைமடல்

கிராமத்தை சேர்ந்த முன்னாள் கர்ணம் வெங்கடாசலம் என்பவர் எழுதினார். வெங்கடாசலம், அய்யம்பெருமாளின் பங்காளி என்றால், சரியல்ல, ஒரே வகுப்பைச் சேர்ந்தவர். நான் சாட்சி கையெழுத்து செய்த ஆவணம் பதிவு செய்தபோது, இன்னார் என்று நிரூபித்தது என யார் கையெழுத்து செய்தார்கள் என்றால், அதுபற்றி நினைவு இல்லை.

3. வெள்ளாளப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பரமசிவம் என்பவர் பைனான்ஸ் செய்து வந்தார் என்றால், சரிதான். அந்த பைனான்ஸில் 1-ம் வாதி அன்புக்கரசும் ஒரு பங்குதாரர் என்றால், சரிதான். பரமசிவம், 1-ம் வாதி அன்புக்கரசு, நான், முத்துசாமி, பெரியசாமி ஆகியோர் கூட்டு சேர்ந்து மனநிலை சரியில்லாத அய்யம்பெருமாள் என்பவரிடமிருந்து 23.01.1985 தேதியிட்ட கிரயப்பத்திரத்தை மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றால், சரியல்ல, கிரயப்பத்திரம் எழுதிக்கொடுத்தபோது அய்யம்பெருமாள் நல்ல மனநிலையில்தான் இருந்தார். நான் சொல்வதுபோல் கிரயப்பத்திரம் எழுதிக்கொடுத்தபோது நல்ல மனநிலையில் இல்லை என்றால், சரியல்ல.

4. கிரயப்பத்திரத்தில் அய்யம்பெருமாள் நடுக்கத்துடன் போட்டுள்ளார் என்றால், சரியல்ல, நல்ல நிலையில்தான் கையெழுத்து போட்டார். மனநிலை சரியில்லததால்தான், வா.சா.ஆ.2 கிரயப்பத்திரத்தில் கையெழுத்தை நடுக்கத்துடன் போட்டுள்ளார், என்றால், சரியல்ல. 1-ம் பிரதிவாதி அழகம்மாள், அய்யம்பெருமாளின் மனைவி என்றால், சரிதான். 2-ம் பிரதிவாதி லட்சுமி அய்யம்பெருமாளின் மகள் என்றால், சரிதான். வா.சா.ஆ.2 கிரயப்பத்திரம் எழுதியபோது பிரதிவாதிகளும் உடன் இருந்தார்களா என்றால், இருந்தார்கள். பிரதிவாதிகள் இருவரும் அய்யம்பெருமாளின் வாரிசுகள் என்றால், சரிதான்.

5. பிரதிவாதிகளிடமிருந்து வா.சா.ஆ.2 கிரயப்பத்திரத்தில் கையெழுத்து வாங்கப்பட்டுள்ளதா என்றால், இல்லை. மனநிலை சரியில்லாத அய்யம்

பெருமாளிடமிருந்து வா.சா.ஆ.2 கிரயப்பத்திரம் மோசடியாக எழுதி வாங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.2 கிரயப்பத்திரத்தில் உள்ள சொத்து அய்யம்பெருமாளுக்கு பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்டது என சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

6. வா.சா.ஆ.2 கிரயப்பத்திரத்தில் உள்ள சொத்து அய்யம்பெருமாளுக்கு பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்டதால் அச்சொத்து அய்யம்பெருமாளின் பொது குடும்ப சொத்து என்றால், சரிதான். வா.சா.ஆ.2 கிரயப்பத்திரத்தில் உள்ள சொத்து தவிர, அய்யம்பெருமாளுக்கு வேறு சொத்தும் உள்ளதா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. ஊரின் நடுவில் அய்யம்பெருமாளுக்கு சொந்தமான பொதுகுடும்ப சொத்து உள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. கனகசபை, அய்யம்பெருமாள், கந்தசாமி ஆகியோர் இருசப்பன் மகன்கள் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. அய்யம்பெருமாளின் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

7. 25.02.1980 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலமாகத்தான் அய்யம்பெருமாளிடமிருந்து வந்ததா என்றால், தெரியாது. நான் சாட்சி கையெழுத்து செய்துள்ள கிரயப்பத்திரத்தில் உள்ள சொத்து அய்யம்பெருமாளுக்கு மட்டும் பாத்தியப்பட்டதா அல்லது வேறு யாருக்காவது பாத்தியப்பட்டதா என்றால், அய்யம்பெருமாளுக்கு மட்டும் பாத்தியப்பட்டது. அய்யம்பெருமாளுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் நான் பார்த்தேனா என்றால், கிரயத்தின்போது பார்த்தேன். கிரய சொத்து அய்யம்பெருமாளுக்க மட்டுமே பாத்தியப்பட்டதல்ல என்றும், கிரயம்பதிவின்போது நான் எந்த ஆவணம் பார்த்தேன் என்றால், சரியல்ல.

8. பாகப்பிரிவினை பத்திரத்தின்மூலமாக கிரயப்பத்திரத்தின் அய்யம்பெருமாளுக்கு எந்த உரிமையும் ஏற்படவில்லை என்றால், சரியல்ல. 1980-

ஆண்டிலிருந்தே அய்யம்பெருமாளுக்கு மனநிலை சரியில்லாமல் இருந்ததால்தான், அந்த சமயத்தில் எழுதப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலமாகவும், அதன் பின்னிட்டு எழுதப்பட்ட கிரயப்பத்திரத்தின்மூலமாக அய்யம்பெருமாளுக்கோ, அல்லது வாதிக்கோ எந்தவித உரிமையும் ஏற்படவில்லை என்றால், சரியல்ல.

9. தாவா சொத்தில் இருசப்ப உடையாரின் பெண் வாரிசுகளுக்கும் உரிமையுள்ளதால், அவர்களை விட்டு எழுதப்பட்ட பாகப்பிரவினை பத்திரம் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 கிரயப்பத்திரம் எழுதியபோது, பிரதிவாதிகள் சார் பதிவாளர் அலுவலகத்தில் இல்லை என்றும், அவர்களுக்கு தெரியாமல் வா.சா.ஆ.2 கிரயப்பத்திரத்தை இரகசியமாக எழுதிவாங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. அய்யம்பெருமாள் பரமசிவத்திடமிருந்து எந்த கடனும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. கிரயத்தின்போது பரமசிவத்திருக்கு 1-ம் வாதி அன்புக்கரசு ரூ.5000/- கொடுத்து ரசீது எதுவும் வாங்கப்பட்டுள்ளதா என்றால், பரமசிவத்திடம் அய்யம்பெருமாள் புரோநோட் எழுதிக்கொடுத்திருந்தார், அன்புக்கரசு பணத்தை கொடுத்துவிட்டு புரோநோட்டை திரும்ப பெற்றுக்கொண்டார். அந்த புரோநோட்டை கிரயப்பத்திரத்துடன் சேர்த்து பதிவு செய்யப்பட்டதா என்றால், இல்லை. நான் சொல்வதுபோல் புரோநோட்டை எழுதிக்கொடுக்கவும் இல்லை, அதை திரும்ப பெற்றுக்கொள்ளவில்லை என்றால், சரியல்ல.

10. பிரதிபலன் எதுவும் செலுத்தாமல் வா.சா.ஆ.2 கிரயப்பத்திரம் எழுதி வாங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. தாவா சொத்தை அன்புகரசும், அவரது குடும்பத்தாரும் 36 ஆண்டு காலமாக அனுபவித்து வருவதாக சொல்வது பொய் என்றும், தாவா சொத்தின் கிழபுறம் 72 செண்ட் நிலம் பெண் வாரிசுகளுக்கு வழங்கப்பட்டு பிரதிவாதிகளின் அனுபவதிலிருந்து வருகிற என்றால் சரியல்ல. வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மை புறம்பாக பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time : 12.16 P.M.

**ஒப்பம்/- ஜி. யுவராஜ்**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**